Register No. | | | | | | | | |

**5270–22**

# FA6A

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : Two and half hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Pardoning Power of the President under the Constitution of India with decided cases.

   இந்திய அரசமைப்பின் கீழ் குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை தொடர்புடைய வழக்குகளுடன் விளக்கவும்.

2. Discuss the nature and distribution of legislative powers between the union and the states.

   மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான சட்ட அதிகாரங்களின் தன்மை மற்றும் பகிர்வு பற்றி விவாதிக்கவும்.

3. Explain in detail the effects of Proclamation of Emergency under Article 352 of the Indian Constitution.

   இந்திய அரசமைப்பின் 352-வது ஷரத்தின் கீழ் அவசர நிலை பிரகடனத்தின் விளைவுகளை விரிவாக விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the jurisdiction of the Supreme Court under Article 136 of the Constitution of India.

   இந்திய அரசமைப்பின் 136-வது ஷரத்தின் படி உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பை விளக்கவும்.

5. 'All Money Bills are Financial Bills, but all Financial Bills are not Money Bills'. Substantiate the statement.

'அனைத்து பண மசோதாக்களும் நிதி மசோதாக்கள் ஆகும்; ஆனால் அனைத்து நிதி மசோதாக்களும் பண மசோதாக்கள் அல்ல.' அறிக்கையை நிரூபிக்கவும்.

6. Discuss the 'Doctrine of Pleasure' and its exceptions.

விருப்புரிமைக் கோட்பாடு மற்றும் அதன் விதிவிலக்குகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Attorney General of India.

இந்திய தலைமை வழக்கறிஞர்.

(b) Office of Profit.

ஆதாயம் தரும் பணி.

(c) Eminent Domain Principle.

சொத்தெடுப்பு உரிமை கோட்பாடு.

(d) Residuary Powers.

எஞ்சியுள்ள அதிகாரங்கள்.

(e) Election Commission of India.

இந்திய தேர்தல் ஆணையம்.

(f) Independence of Judiciary.

நீதித்துறையின் சுதந்திரம்.

(g) Anti-Defection Law.

கட்சித் தாவல் தடுப்புச் சட்டம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A case was pending before a special court in Bombay for over 15 years. Due to the urgency and speedy disposal of the case, the Honourable Supreme Court under Article 139-A of the Constitution of India withdrawn the case from the Special Court and transferred it to Bombay High Court. The Constitutional validity of the order was challenged – Decide.

பம்பாயில் உள்ள ஒரு சிறப்பு நீதிமன்றத்தில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு வழக்கு நிலுவையில் இருந்தது. இந்த வழக்கு விரைவாகவும் அவசரமாகவும் முடிக்கப்பட வேண்டிய காரணத்தினால், மாண்புமிகு உச்சநீதிமன்றம் இவ்வழக்கை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஷரத்து 139-A-ன் கீழ் பம்பாய் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றியது. இந்த உத்தரவின் அரசமைப்பு செல்லுந்தன்மை குறித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தீர்மானிக்கவும்.

9. In the Legislative Assembly Election of 2004, a party named 'JKC' headed by Mr. 'X' won the election with huge majority. Prior to election, a number of charges were levelled against Mr. 'X' under the Prevention of Corruption Act for committing offences by him during his previous tenure as Chief Minister. He was convicted and sentenced to imprisonment for more than 2 years. As a result, he was disqualified to contest election by the Election Commission. But his party elected him as the Chief Minister. Is the appointment valid? Decide.

2004-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் திரு. 'X' என்பவரின் தலைமையிலான 'JKC' என்ற பெயருடை கட்சி மிகப்பெரிய பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. தேர்தலுக்கு முன்பு, திரு. 'X' முதலமைச்சராக பதவியில் இருந்த காலத்தில் புரிந்த குற்றங்களுக்காக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் பல்வேறு குற்றச்சாட்டுகள் நிறுவப்பட்டிருந்தது. அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இதன் விளைவாக அவர் தேர்தலில் போட்டியிட முடியாதென தேர்தல் ஆணையத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால், அவருடைய கட்சியினர் அவரை முதலமைச்சராக தேர்ந்தெடுத்தனர். இந்த நியமனம் செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்.

10. In 2015, the Indian Parliament passed an amendment constituting a commission for the appointment of the judges of Supreme Court and High Courts of India, nullifying the 'Collegium System'. The Commission comprised of the Chief Justice of India, two eminent senior justices, the Union Minister of Law and Justice and two eminent persons. The Amendment was latter challenged before the Supreme Court of India. Analyse the Constitutional validity of the said amendment.

2015-ம் ஆண்டில் இந்திய பாராளுமன்றம் 'கொலீஜியம் முறையை' செல்லாததாக செய்து, உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கான ஆணையத்தை அமைக்கும் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியது. அந்த ஆணையத்தில் இந்திய தலைமை நீதிபதி, மற்ற இரு மூத்த நீதிபதிகள், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் மற்றும் இரண்டு சிறந்த நபர்கள் உள்ளடங்கியிருந்தனர். பிறகு, இந்தத் திருத்தத்தின் மீதான மறுப்பு உச்சநீதிமன்றத்தின் முன்பு கொண்டு செல்லப்பட்டது. இந்தத் திருத்தத்தின் அரசமைப்புச் செல்லுந்தன்மையை பகுப்பாய்வு செய்க.

---

Register No. |   |   |   |   |   |   |   |   |

**FA6B**

5214–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is prospectus? Discuss the nature and extent of the liability of directors with regard to untrue statements in the prospectus.

   திட்ட அறிவிப்பு என்றால் என்ன? திட்ட அறிவிப்பில் உண்மையான தகவல்களுக்கு எதிராக இயக்குநர்களின் பொறுப்பு மற்றும் இயல்பை விளக்கி கூறவும்.

2. Define 'Director' under the Companies Act 1956. Explain the law relating to appointments and removal of director.

   1956-ம் ஆண்டு நிறுவன சட்டத்தின் கீழ் இயக்குநர் யார் என்பதை வரையறுத்து மற்றும் அவர் எவ்வாறு நியமனம் செய்யப்படுகிறார் என்றும், எவ்வாறு நீக்கப்படுகிறார் என்றும் விளக்குக.

3. Briefly indicate the various kinds of meetings with their respective purposes dealt with under the Companies Act.

   நிறுவனச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு வகையான கூட்டங்களை அவைகளின் நோக்கங்களுடன் சுருக்கமாக சுட்டிக்காட்டுக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ
300 சொற்களில் விடையளிக்கவும்.

4. The Memorandum of Association is a fundamental document of a company. Explain.

   'அமைப்பு முறையேடு' என்பது ஒரு நிறுவனத்தின் அடிப்படை பட்டயமாகும் - விளக்குக.

5. What do you mean by debentures? Explain the various kinds of debentures and the law relating to debentures.

   கடனீட்டுதழ் என்றால் என்ன? இதன் வகைகள் மற்றும் இது குறித்தான விதிகளை விளக்குக.

6. Discuss the circumstances in which and the process by which a company can reduce its share capital.

   ஒரு நிறுவனம் தன் பங்கு மூலதனத்தை எந்தச் சூழ்நிலையில் எந்த முறையில் குறைக்கலாம் என்பதை விவாதிக்க.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

   (a) Alteration of Article

   செயல்முறை விதிகளின் மாற்றம்

   (b) Promoters

   துவக்குநர்கள்

   (c) Transfer of shares

   பங்கு மாற்றம்

   (d) Qualification and disqualification of directors

   இயக்குநர்களின் தகுதியும் மற்றும் தகுதியின்மையும்

   (e) Prevention of oppression and mismanagement.

   அடக்கு முறையையும் தவறான மேலாண்மைகளையும் தடுத்தல்

   (f) Members and shareholders

   உறுப்பினர்களும் பங்குதாரர்களும்

   (g) Resolutions.

   தீர்மானங்கள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The directors of a company paid the dividend out of the share capital. Such act was challenged by shareholders. Advise to the shareholders.

ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் பங்கு மூலதனத்திலிருந்து பங்கு ஆதாயத்தை எடுத்து வழங்கினார்கள். இயக்குநர்களின் இச்செயலை பங்குதாரர்கள் எதிர்த்தனர். பங்குதாரர்களுக்கு உரிய அறிவுரை வழங்கவும்.

9. Ram had subscribed for the memorandum of a company for 100 shares. The company was duly registered but ultimately he took only 10 shares. The company was wound up. What is the extent of Ram's liability.

ராம் என்பவர் ஒரு நிறுவனத்தின் 100 பங்குகள் வாங்க அமைப்பு முறையேட்டினை பெற்று சந்தா அனுப்பினார். அந்த நிறுமம் முறைப்படி நிறுமச் சட்டத்தின் கீழ் பதிவும் செய்யப்பட்டது. நிறுமம் பதிவு செய்யப்பட்ட பின்பு ஆனால் அவர் 10 பங்குகள் மட்டும் பெற்றுக்கொண்டார். அந்த நிறுவனம் கலைக்கப்பட்டது. ராமுவின் பொறுப்பு நிலை என்ன?

10. 'X' applies for some shares of a company on the basis of prospectus, which contains a misstatement. The shares are allotted to 'X', who afterwards transfers them to 'A'. Can 'A' bring an action for rescission on the ground of misstatement?

திட்ட அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவனத்தின் சில பங்குகளைப் பெற 'ஒ'- என்பவர் மனு செய்கிறார். அந்த திட்ட அறிவிப்பு தவறான தகவல்களை கொண்டிருந்தது. 'ஒ'விற்கு பங்குகள் ஒதுக்கப்படுகின்றன. பின்னர் அவர் அவற்றை 'அ' – விற்கு மாற்றுகிறார். தவறான தகவல்களை காரணங்காட்டி தள்ளுபடி செய்ய - 'அ' நடவடிக்கை எடுக்க முடியுமா?

Register No. | | | | | | | | |

**FA6C**

**5271–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the difference between Registration of Trade Union and Recognition of Trade Union.

   தொழிற்சங்க பதிவு செய்தல் மற்றும் தொழிற்சங்க அங்கீகாரம் ஆகியவற்றின் வேறுபாடுகளை விளக்குக.

2. Explain the machineries provided under the Industrial Disputes Act for the investigation and settlement of Industrial Disputes.

   தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் அவ்வகை தகராறுகளை விசாரணை செய்யவும் சுமூக தீர்வுகாணவும் வழிவகுக்கப்பட்டுள்ள இயக்க அமைப்பை விளக்குக.

3. Explain the authorised deductions under the Payment of Wages Act, 1936?

   1936 ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பிடித்தங்களை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the various salient features incorporated under the Industrial Employment (Standing Orders) Act 1946.

   1946 ம் ஆண்டு தொழிலகப் பணிகள் (நிலையாணைகள்) சட்டத்தின் பல்வேறு முக்கிய இயல்புகளை விளக்குக.

5. Discuss the statutory procedure for fixation and revision of minimum wages.

குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்ய மற்றும் மாற்றியமைப்பதற்கு சட்ட ரீதியான நடைமுறைகளை விவாதிக்க.

6. Compare and contrast collective bargaining and compulsory adjudication as a means of achieving industrial peace.

தொழில் அமைதியை அடைவதற்கு ஒரு வழியாக கூட்டுப்பேரத்தையும், கட்டாயத் தீர்ப்பையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) International Labour Organisation

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

(b) Public Utility Service

பொது பயன்பாட்டு சேவை

(c) Wage period

ஊதிய காலம்

(d) Unfair labour practices

நேர்மையற்ற தொழில் நடைமுறைகள்

(e) Award

தீர்வம்

(f) Need based minimum wage

தேவை அடிப்படையிலான குறைந்த பட்ச ஊதியம்

(g) Equal remuneration

சம ஊதியம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' is a member of a Trade Union by name 'ABC'. He is 20 years Old. Since he has not attained 21 years of age he has not been appointed as the Executive member of the Trade Union. 'X' challenges. Decide.

'X' என்பவர் 'ABC' என்ற தொழிற்சங்கத்தின் அங்கத்தினராவார். அவருக்கு 20 வயது ஆகின்றது. அவருக்கு 21 வயது ஆகாததால் அவரை தொழிற்சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக நியமிக்கவில்லை. 'X' இதனை எதிர்க்கின்றார் – முடிவு செய்க.

9. An Industrial dispute arises between the management and employees of the Chennai branch of an all India Company having its head quarters at the Hyderabad. Decide which Government is an appropriate Government to decide this issue.

ஹைதராபாத்தை தலைமையிடமாக உடைய ஓர் அகில இந்திய நிறுவனத்தின் சென்னை கிளை நிர்வாகத்திற்கும் அங்குள்ள தொழிலாளர்களுக்கும் இடையே தொழிற்தகராறு ஏற்படுகிறது. இந்த வழக்கை முடிக்க உரிய அரசு எது என்பதை முடிவு செய்க.

10. The employer of an industry terminated the services of Sam, a workman, for not possessing sound health for active duties for a long period. The workman claimed compensation. Decide.

தொழிற்சாலை ஒன்றின் பணியாண்மையர், நேர்த்தியுடன் பணியாற்றுவதற்கான உடல் ஆரோக்கியம் நீண்ட காலமாக இல்லை என்பதால் தன் தொழிலாளர் சாம் என்பவரை பணியிலிருந்து நீக்கம் செய்தார். தனக்கு இழப்பீடு தர வேண்டும் என்று அந்த தொழிலாளர் கோரினார். முடிவு செய்க.